People's Watch
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org
A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

27.11.2023

# பத்திரிகைச் செய்தி

**போக்ஸோ (POCSO) வழக்கில் பாதிப்பிற்குள்ளான சிறுமியை கை விலங்கிட்டு பெண் காவலர் அழைத்துச் சென்ற சம்பவத்தினை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன் வந்து (Suo-Moto) விசாரிக்கக் கோரி மக்கள் கண்காணிப்பகம் கடிதம்**

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் மக்கள் கண்காணிப்பகம் அமைப்பானது தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களில் எங்கெல்லாம் மனித உரிமை மீறல்கள் நடைபெறுகிறதோ, அவ்விடங்களுக்கு நேரடியாகச் சென்று கள ஆய்வு மேற்கொண்டு உண்மை நிலைகளைக் கண்டறிந்து அவற்றின் அடிப்படையில் மாநில, தேசிய, சா்வ தேசிய மனித உரிமை ஆணையங்களுக்கும், சட்ட அமைப்புகளுக்கும் அரசின் கவனத்திற்கு மனித உரிமை மீறல்களின் வடிவங்களையும் தன்மைகளையும், எடுத்துச்சென்று உரிய தலையீடுகள் மூலமாக பாதிக்கப்பட்டவா்களுக்கு நீதியையும் நிவாரணத்தையும் பெற்றுத் தருகின்ற பணியினைச் செய்து வருகின்றது. டிசம்பா் 1995 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்களைப் பாதுகாப்பதிலும், மேம்படுத்துவதிலும் தீவிரமாக ஈடுபட்ட 28 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. குறிப்பாக தமிழ்நாட்டில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உரிமைகள் தொடா்பான மீறல்களை கண்காணித்தும் வருகிறது.

கடந்த 21.11.2023 அன்று மாநிலம் முழுவதும் செய்தித்தாள்கள், ஊடகங்கள் வாயிலாக பரவி வரும் செய்தியில், 07.11.2023 அன்று பெண் காவலா் ஒருவா், போக்ஸோ (POCSO) வழக்கில் பாதிக்கப்பட்ட 15 வயதான சிறுமியிடம் 164 பிரிவின் கீழ் வாக்குமூலம் பெறுவதற்காக, ஊட்டியில் உள்ள அன்னை சத்யா இல்லத்தில் இருந்து கோத்தகிரியில் உள்ள மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றுள்ளாா். பாதிக்கப்பட்ட 15 வயதான சிறுமியுடன் கோத்தகிரி பேருந்து நிலையத்தில் இறங்கிய பெண் காவலா் சிறுமியின் கைகளில் விலங்கிட்டு, கிட்டத்தட்ட 400 மீட்டா் நடந்தவாறு நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றுள்ளாா். நீதிமன்ற வாசலில் மட்டும் கை விலங்கை

அகற்றி, 164 பிரிவின் கீழ் வாக்குமூலம் பெற்றவுடன், மீண்டும் அச்சிறுமிக்கு கை விலங்கிட்டு, பொது சாலையில் பேருந்து நிலையம் வரை நடக்க வைத்தது என்பது மிகுந்த மன வேதனைக்கு உள்ளாக்கிறது.

இதனால் மிகுந்த மன வேதனை அடைந்த அச்சிறுமியின் தாயார் ஊட்டியில் உள்ள காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தன் மகளை கை விலங்கிட்டு அழைத்துச் சென்றது குறித்து 15.11.2023 அன்று புகார் அளித்துள்ளார். அப்புகாரின் பேரில் விசாரணை என்ற பெயரில் ஊட்டியில் உள்ள அன்னை சத்யா இல்லத்தில், பாதிக்கப்பட்ட அச்சிறுமியைப் பார்த்து, உன்னை 18 வயது வரை வீட்டுக் காவலில் வைப்போம் என்று காவல்துறையினர் மிரட்டி எதுவும் எழுதப்படாத வெற்று காகிதத் தாளில் கையெழுத்துப் பெற்றுள்ளனர்.

பின்னர் அச்சிறுமி எழுதியதாகக் கூறப்படும் கடிதத்தை, சிறுமியின் தாயாரிடம் காட்டி, கை விலங்கிட்டு அழைத்துச் சென்றது குறித்து பொய்யான புகார் அளித்ததாகக் கூறி ஊட்டி காவல் கண்காணிப்பாளரிடம் அளித்த புகாரினை திரும்பப் பெற வலியுறுத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து தாமாக முன் (Suo-Moto) வந்து இவ்வழக்கினை விசாரிக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு மனு அனுப்பியதோடு, மனித உரிமைகள் திருத்தச் சட்டம், 2019 பிரிவு 12 (a) இன் கீழ் தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்திற்கும் தாமாக முன் (Suo-Moto) வந்து விசாரணைக்கு எடுக்குமாறு மக்கள் கண்காணிப்பகம் 25.11.2023 அன்று மனு அனுப்பிள்ளது.



(ஹென்றி திபேன்)
நிர்வாக இயக்குநர், மக்கள் கண்காணிப்பகம்

தொடர்புக்கு: 99943 68571, 99943 68524

இணைப்பு:

1. சென்னை உயர்நீதிமன்ற மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களுக்கு அனுப்பிய கடிதம்
2. தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் அவர்களுக்கு அனுப்பிய கடிதம்